செ. வெ. எண். 621 நாள். 16.10.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுவரும் சென்னை வெளிவட்டச் சாலைப்பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று (16.10.2012) நேரில் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையின் முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுநிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சென்னை மாநகரில் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் வெளிவட்டச் சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டு, அதன்படி தே.நெ.45ல் வண்டலூரில் தொடங்கி தே.நெ.4ல் நசரத்பேட்டை, தே.நெ.205ல் நெமிலிச்சேரி மற்றும் தே.நெ.5ல் படையநல்லூர் வழியாக திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையிலான **60.15** கி .மீ நீளச் சாலை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதில் முதற்கட்டமாக, வண்டலூர் (தே.நெ.45) முதல் நெமிலிச்சேரி (தே.நெ.205) வரையிலான 29.65 கி.மீ நீளத்திற்கு ரூ.1081.40 கோடி மதிப்பில் சென்னை வெளிவட்டச் சாலையினை பொது மற்றும் தனியார் பங்கேற்போடு வடிவமைத்தல், கட்டுதல், நிதி திரட்டுதல், செயல்படுத்தல், ஒப்படைத்தல் (DBFOT) முறையில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு, இப்பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிகளில் 14.00 கி.மீ நீளத்திற்கு தார் சாலை அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. எஞ்சிய சாலைப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதில் 5 ஆற்றுப் பாலங்கள், 3 சாலை மேம்பாலங்கள், 8 வாகன கடவு கீழ்பாலங்கள், 18 பாதசாரிகளுக்கான கீழ்பாலங்கள், 88 சிறுபாலங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு இரயில்வே கடவு சாலை மேம்பாலங்களுடன் கூடிய பரிமாற்ற வழி மேம்பாலங்கள் மற்றும் ஒரு பரிமாற்ற வழி மேம்பாலத்தின் கட்டுமானபணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நடைபெற்றுவரும் பணிகளை துரிதப்படுத்தி விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**